# நம்பி அகப்பொருள் இலக்கணம்

ஐந்திணை ஒழுக்கம்

# அகப்பொருள் இலக்கணம்

ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையே ஏற்படும் காதல் உணர்வை மையமாகக் கொண்டு அகப்பொருள் இலக்கணம் அமைந்துள்ளது. இதில் ஆணை தலைவன் என்றும் பெண்ணை தலைவி என்றும் கூறுவர். தலைவியின் தோழியும் அகப்பொருள் பாடல்களில் முக்கிய இடம் வகிக்கும் ஒரு பாத்திரம் ஆவாள். காதல் பற்றிப் பாடும்போது தலைவன் தலைவி என்று பொதுவாகப் பாடுவார்களே தவிர ஒருவருடைய இயற்பெயரைச் சுட்டிப் பாடுவதில்லை. காதல் உணர்ச்சி எல்லோருக்கும் பொது என்பதால் தனி ஒருவருடைய பெயரைச் சுட்டிப் பாடுவதில்லை. அகப்பொருள் பாடல்கள் நாடகப் பாங்கிலான தன்மையைக் கொண்டிருக்கும். எல்லாப் பாடல்களும் தலைவன், தலைவி - தோழி முதலியவர்களில் யாராவது ஒருவர் கூறுவதாக அமைந்திருக்கும். ஒரே பாடலில் இருவர் உரையாடுவது போன்ற பாடல்களும் கலித்தொகையில் உண்டு. ஒவ்வொரு பாடலுக்கும் பிற்காலத்தில் திணை - துறை வகுத்துக் காட்டியுள்ளனர்

# அகப்பொருள் திணைகள்

- குறிஞ்சித்திணை
- முல்லைத்திணை
- மருதத்திணை
- நெய்தல்திணை
- பாலைத்திணை
- இந்த ஐந்து திணைகளுக்கும் உரிய அகப்பொருள் இலக்கணம் மூன்று வகைப்படும். அவை,
- முதற்பொருள்
- கருப்பொருள்
- உரிப்பொருள்
- ஆகியன ஆகும்.


© Garuda-sangatamil.com

# குறிஞ்சி (திணை)

- **குறிஞ்சி நிலம்** என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். மலையும் மலை சார்ந்த இடங்களும் குறிஞ்சி என அழைக்கப்படுகின்றன. குறிஞ்சி நிலத்திற்கு சேயோன் குலதெய்வமாக பண்டைய மக்களால் வழிபடப்பட்டார். குறிஞ்சி நிலத்து ஊர்கள் சிறுகுடி, பாக்கம் என்று அழைக்கப்பட்டன. "சேயோன் மேய மைவரை உலகமும்" எனத் தொல்காப்பியம் குறிஞ்சி நிலம் பற்றிக் கூறுகிறது.

- குறிஞ்சி நிலத்தின் பொழுதுகள்
- கூதிர், முன்பனி என்னும் பெரும் பொழுதுகளும் யாமம் என்னும் சிறுபொழுதும் குறிஞ்சி நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.

- குறிஞ்சி நிலத்தின் கருப்பொருட்கள்
- *தெய்வம்*: சேயோன்
- *மக்கள்*: குறவர், பொருப்பன், வெற்பன், சிலம்பன், நாடன், கொடிச்சி,கானவர்
- *மரங்கள்*: வேங்கை, அகில், சந்தனம், மூங்கில்
- *விலங்குகள்*: குரங்கு, கரடி,புலி, பன்றி
- *பறவை* : கிளி, மயில்
- *பறை* : தொண்டகம், வெறியாட்டு
- *பண்*: குறிஞ்சி யாழ்
- *மலர்கள்*: குறிஞ்சி, காந்தள்,வேங்கை
- *தொழில்*: கிழங்கு அகழ்தல், தேன் எடுத்தல்,வெறியாடல் ,தினைகாத்தல்
- *நீர் நிலை* : அருவி, சுனை
- *உணவு* : தினை, மலைநெல்,மூங்கிலரிசி
- *ஊர்* : சிறுகுடி
- குறிஞ்சி நிலத்தின் உரிப்பொருட்களை
- *அக ஒழுக்கம்* : புணர்தல்
- *புற ஒழுக்கம்* : வெட்சி
- குறிஞ்சி நிலப்பகுதிகளில் குரங்கு, கரடி, சிறுத்தை, புலி, யானை, காட்டுப்பன்றி, காட்டு ஆடு போன்ற விலங்குகளும் வேங்கை, திமிசு, தேக்கு,சந்தனம், அகில், அசோகு, மூங்கில், நாகம், கடம்பு, கருங்காலி, பலா போன்ற மரங்களும், குறிஞ்சி, காந்தள், வேங்கை போன்ற மலர் வகைகளும் காணப்படுகின்றன.

# 5. குறிஞ்சி kuṟiñci








- Common Name: Kurunji, Neelakurinji
- Botanical name: Strobilanthes kunthiana (Nees) T. Anderson

http://www.flowersofindia.net/catalog/slides/Kurinji.html

# கருப்பொருள்






# உரிப்பொருள் - புணர்தல்






# முல்லை

- **முல்லை** என்பது பண்டைத் தமிழகத்தில் பகுத்து அறியப்பட்ட ஐந்து வகைத் தமிழர் நிலத்திணைகளில் ஒன்றாகும். காடும், காடு சார்ந்த இடங்களும் முல்லை நிலமாகும். செம்மண் பரந்திருத்தலால் முல்லை நிலமானது செம்புலம் எனவும் அழைக்கப்பட்டது. இந்நிலம் முல்லை மலரைத் தழுவிப் பெயரிடப்பட்டது. " மாயோன் மேய காடுறை உலகமும்" எனத் தொல்காப்பியம் முல்லை பற்றிக் கூறுகிறது.

- முல்லை நிலத்தின் பொழுதுகள்
- *கார்* என்னும் பெரும் பொழுதும் *மாலை* என்னும் சிறுபொழுதும் முல்லை நிலத்துக்குரிய பொழுதுகளாகும்.

- முல்லை நிலத்தின் கருப்பொருட்கள்
- *தெய்வம்*: மாயோன்
- *மக்கள்*: இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்
- *உணவு*: வரகு, சாமை
- *பறவைகள்*: காட்டுக் கோழி
- *விலங்குகள்*: மான், முயல், பசு, மரை
- *நீர் நிலை* : காட்டாறு
- *மரங்கள்*: கொய்யா, காயா, குருந்து
- *மலர்கள்*: முல்லை, பிடா,தொன்றி
- *பண்*: பறை, முல்லை யாழ்
- *பறை* : ஏறுகோள்
- *தொழில்*: சாமை, வரகு விதைத்தல், களை எடுத்தல், குழலூதல், ஏறு தழுவல், குரவைக் கூத்தாடல், மந்தை மேய்த்தல்
- *ஊர்*: பாடி,சேரி
- முல்லை நிலத்தின் உரிப்பொருட்கள்
- *அக ஒழுக்கம்* : இருத்தல்
- *புற ஒழுக்கம்* : வஞ்சி
-

# கருப்பொருள்








# கருப்பொருள் - உரிப்பொருள்




ஆற்றியிருத்தல்

